RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2241821

# பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையில் படைப்பாளி உளவியல்

**சு. விக்னேசு** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோயம்புத்தூர்-641010, தமிழ்நாடு, இந்தியா.

# Summary of Creative Psychology of Creativity in Pillaitamil Literature

**S. Vignesh** [a, *]

[a] Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar Arts, Science and Tamil College, Perur, Coimbatore-641010, Tamil Nadu, India

* Corresponding Author: vickytamil152@gmail.com

Received: 23-09-2022
Revised: 02-11-2022
Accepted: 12-11-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Pillaitamil is one of the 96 genres of Tamil literature. Pillaikavi literature doesn't originate in foreign language. Pillaitamil literature praises the Lord or the great human being as a child in the seasons such as Pavatu, Sengirai, Sappani, Muttham, Alakham, Ambuli, Chittil, Siruparai, Siruthaer, Ammanai, Osal, Neeradal etc. The purpose of this article is to approach such genre of Pillaitamil literature from a psychological point of view. Literature is a creation of the mind. Thus, the psychological elements found in literature are categorized as creator, creative method, storyteller and reader. In these ways, creative psychology is revealed in Pillaitamil literature. It is highlighted that the mood of the creator who sings Pillaitamil is in three stages namely motherhood, childhood and as a young girl. This article explains the mood of the mother in the seasons like the period of Kaapu, Ambuli and Thala, the psychology of the girl in the season of childhood, the movement behaviours of children in other seasons, the seasons like sengir are the impulses that the mother causes to her children.

**Keywords:** Psychology, Pillaitamil, Creative, Summary, Literature

## முன்னுரை

மனிதன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறக்கும் காலம் வரையிலும் பாடுவனவாக இலக்கியங்கள் தமிழ் மொழியில் தோன்றியுள்ளன. பிள்ளைத் தமிழ் என்ற இலக்கிய வகை மனிதனின் தொடக்க காலப் பருவத்தைப் பாடுவதாக அமைந்துள்ளது. இலக்கியங்களில் புலவனுடைய உள்ளம் சார்ந்த இயக்கங்கள் நிறைந்திருப்பதைக் காண முடிகிறது. அதுபோல் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களிலும் உளவியல் கூறுகள் உள்ளது என்பதை விளக்குவதாகப் இக்கட்டுரை அமைகிறது. இலக்கியங்களில் உளவியல் கூறுகள் இருப்பதை விளக்குவதாகப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. சர்வதேசத்தமிழ் ஆய்விதழில் எழுதிய, 'பிள்ளைத்தமிழில் அறிவியல் கூறுகள்' என்ற கட்டுரை ஒரு பகுதியாகப் பிள்ளைத்தமிழில் உளவியல் கூறுகள் அமைவதை விளக்கிக் காட்டுகிறது (Meenakshi Balganesh, 2021). அந்த வகையில் பிள்ளைத்தமிழ் எனும் இலக்கிய வகையில் அமைந்துள்ள உளவியல் கூறுகளை, மனவியல் அறிஞர்களின் கருத்துக்களுடன் இக்கட்டுரை பொருத்திக்காட்டுகிறது.

## பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள்

தமிழ் இலக்கிய மரபில் 96 வகையான சிற்றிலக்கியங்கள் உளதெனப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. பாட்டுடைத் தலைவன் வாழ்வின் குறிப்பிட்ட காலத்தைப் படம்பிடிப்பவை சிற்றிலக்கியங்கள். தூது, உலா, குறவஞ்சி, முதலியன பாட்டுடைத் தலைவனது வாழ்வின் இளமைப்பருவத்தைப் பாடுவன. பிள்ளைக்கவி இலக்கியம் மனித வாழ்வின் தொடக்க காலத்து நிகழ்வுகளைப் பாடுவதாகும். படைப்பாளி தான் விரும்பும் பாட்டுடைத் தலைவரைக் குழந்தையாக வைத்துப் பத்துப் பருவங்களில் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஆகும். இவ்விலக்கிய வகையைக் கற்பனை இலக்கியமாகக் கூற முடியாது. கவிஞர் தாம் கண்ட பாட்டுடைத் தலைவரை மனப்படைப்பு நிலையில் தம் குழந்தையாக எண்ணுவதால் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் எழுகின்றன. இலக்கிய வகைகள் 96 என முதலில் வரையறுத்த பிரபந்த மரபியலில் 'பிள்ளைக்கவி முதலா..' எனத் தொடங்கி இருப்பது பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முதன்மையைக் காட்டுகிறது. இலக்கியம் அகத்தெழுச்சிகளின் தூண்டலால் உருவாவது. இலக்கிய வகைகள் அனைத்தும் மாந்தர்தம் வாழ்வின் அந்தந்த நிலைகளில் எழும் உணர்வுகளின் வெளிப்படுத்துவதால் உருவாகின்றன. இதனடிப்படையில் தான் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களும் பாடப்படுகின்றன. இவ்விலக்கிய வகைக்குத் தாய்மை உணர்வு அடிப்படையாகும். எனினும் தாய்மை உணர்வினைத் தம் இயல்பாகக் கொண்ட பெண்பாற் புலவர்கள் பிள்ளைத்தமிழ் நூல்கள் பாடாதமைக்கு, அவர்களது தாய்மை உணர்வு வாழ்வோடு இணைந்திருப்பது காரணமாக இருக்கலாம். பிள்ளை இன்பம் இவ்வாறானது என்பதைத் தம் வாழ்வில் பெண்கள் அனுபவித்து அறிந்துள்ளனர். ஆதலால் அவ்வுணர்வினைப் பிறர் மீது படைத்துக் காண்பது இயல்புக்கு மாறாகிறது. ஆனால் தாய்மை உள்ளத்தை அறிந்திராத ஆண்பால் புலவர்கள் தம் வாழ்வில் கண்டுணர்ந்த தாய்மையை மனப்படைப்பாகக் கைக்கொண்டு இலக்கியமாகப் படைக்கிறார்கள். இவ்வாறு படைப்பது கவிஞரின் புலமைத் திறன் தானே என்று கேட்கலாம், 'குழந்தை நிலையில் பொதுவாகக் காணப்படும் உள்ளுணர்வு, உருவகத்தை (Eidetic Imagery) ஆக்கும் ஆற்றலைச் சில நாவலாசிரியர் (புலவர்) பெற்றிருக்கலாம். இவ்வுள்ளுணர்வு உருவகங்கள் ஓர் உருவத்தைக் கண்டபின் தோன்றுபவையல்ல. நினைவாற்றலால் தோன்றுபவையுமல்ல. ஆனால் இவை உள்ளத்தால் உணரத்தக்கவை. எறிச் ஜீனஷின் முடிவுப்படி, இவ்வாற்றல் புலனுணர்வையும் மனனுணர்வையும் கலைஞன் தனக்கே உரிய நிலையில் ஒன்றியியைத்ததின் அறிகுறியாகும். ஓர் இனத்தின் தொன்மையான தனித்தன்மையைத் தன்னிடம் கொண்டுள்ளதோடு அதனை அவன் (புலவன்) வளர்த்துக் கொள்கிறான்' (Renevellock, Austin Warren, 1966). எனவே பிள்ளைத்தமிழ் பாடும் புலவர்கள் தாம் உடலால் தாய்மை உணர்வை எய்தாவிடினும், புலன்களால் அறிந்த தாய்மையைத் தம் மனதினால் கருக்கொண்டு இவ்விலக்கியத்தைப் படைக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

## ஆழ்வார்களின் படைப்புகளில் தாய்மை

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்ற முன்னோடியாக இருந்தவர்கள் ஆழ்வார்கள். அவர்களுள் பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துக், கண்ணன் திருமேனி அழகை வந்து காணீர் எனல், தாலப்பருவம், அம்புலிப்பருவம், செங்கீரைப்பருவம், சப்பாணி கொட்டல், தளர்நடைப் பருவம், அச்சோப்பருவம், புறம்புல்கல், கண்ணன் அப்பூச்சிகாட்டல், பாலுண்ண அழைத்தல், காதுகுத்தல், நீராட்டல், காக்கையை வரச் சொல்லல், கோல்கொண்டு வா எனல், பூச்சூட்டல், காப்பிடல், அம்மம் தர மறுத்தல், கன்றின் பின்போக்கிய அன்னை இரங்குதல், கண்ணன் வரும் கோலம் கண்டு அன்னை மகிழ்தல் எனும் அமைப்பில் 230 பாடல்களைப் பாடியுள்ளார் (Jagathrakshakan, 1997). குலசேகர ஆழ்வார் பாடிய தாலப்பருவப் பாடல்களும், ஆண்டாள் நாச்சியார் பாடிய சிற்றில் பருவப் பாடல்களும் பிள்ளைத்தமிழின் முன்னாடியாகக் உள்ளன. பெரியாழ்வார் பாடிய கன்றின் பின்போக்கிய அன்னை இரங்குதல், கண்ணன் வரும் கோலம் கண்டு அன்னை மகிழ்தல் ஆகிய பாடல்கள் கண்ணனுக்கு நற்றாயாக ஆழ்வாரைப் படைத்துக் காட்டுகிறது. பெரியாழ்வார் பாடிய காப்பு, செங்கீரை, பூச்சூடல், நீராடல், பூச்சிகாட்டல், அமுதூட்டல் முதலியன செவிலித்தாயின் மனநிலையாகத் தோன்றுகிறது. பிள்ளைத்தமிழ் இலக்கிய முன்னோடிகளான ஆழ்வார் பெருமக்களுள் பெரியாழ்வார், குலசேகர

ஆழ்வார் ஆதிய இருவர் இயற்றிய பிள்ளைத்தமிழ்க்கூறுகள் அனைத்திலும் நற்றாய், செவிலி எனும் இருவகைத் தாய்மார்களது உள்ள நிலைகளைக் காணமுடிகிறது.

தலைவர்களது கருத்துக்களில் ஈடுபாடு கொண்ட புலவர்கள் பாடிய பிள்ளைப் பாட்டுக்கள் தாய்மை உணர்வினின்றும் வேறுபட்டுக் கவிக் கூற்றுகளாகவும் போற்றுதல்களாகவும் அமைந்துள்ளன. இவ்வேறுபாடுகளைக் கொண்டு பிள்ளைத்தமிழ் இலக்கியப் படைப்பாளர்களை, நற்றாய், செவிலி, கவிக்கூற்று என மூவகை உள்ளநிலைகளில் பகுக்க முடிகிறது. இலக்கண வரம்பாகச் செய்யப்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியங்களிலும் பாட்டுடைத் தலைவன், படைப்பாளி எனும் நிலைகளில் உள்ள நிலைகளை வகுக்க இடம் உண்டு. பாட்டுடைத் தலைமகன் செயல்பாடுகளை ஊக்குவிப்பதாகப் பாடப்படும் செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்களில் குழந்தை உளவியலைப் பொருத்திப் பார்க்க முடிகிறது. படைப்பாளி தன் மகவின் மீதான தாய்மை உணர்வைக் காட்டுவதைக் காப்பு, தால், அம்புலி முதலிய பருவங்களில் அறியமுடிகிறது.

## பிள்ளைப் பருவ வரையறை

குழந்தைப் பிறப்பிற்குப் பின் உளவியல் அடிப்படையில் பிள்ளைப் பருவத்தைக் குழவிப் பருவம், முன்குழவிப் பருவம் என இரண்டாகப் பிரிப்பர். பிறப்பு முதல் மூன்று ஆண்டுகளைக் குழவிப்பருவம் எனவும், ஆறு வயது வரை உள்ள பருவத்தை முன்குழவிப் பருவம் எனவும், 6 முதல் 12 வரை உள்ள பருவத்தைப் பள்ளிப்பருவம் எனவும், 18 வயதுவரை வளரும் பருவம் எனவும் பிரிப்பர் (2016-17). இப்பகுப்பைப் போலவே பிள்ளைக்கவி பாடும் மரபில் பிறப்பு முதல் 21ஆம் திங்கள் வரை பிள்ளைக்கவி பாடும் முறைமை சுட்டப்படுகிறது (Sankaran, 1944). இந்திரகாளியம் எனும் நூல், பிறப்பு முதல் 16 வயது வரை பிள்ளைக்கவி பாடலாம் எனும் வரையறையைச் செய்துள்ளது. இதில் ஆண், பெண் எனும் அடிப்படையில் ஆணுக்கு 16 வயதளவும் பிள்ளைக்கவி பாடப் பெறும் எனவும், பெண் குழந்தைக்குப் பூப்பெய்தும் பருவம் வரையும் பிள்ளைத்தமிழ் பாடப்படும் எனவும் கூறுகிறது. பிள்ளைப்பருவம் ஆண், பெண் இருபாலருக்கும் முறையே வயது அளவையும், உடலளவையும் வைத்துக் கணக்கிடப்பட்டமை தெரிகிறது. இம்மரபு பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் பேணப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. முடி சூட்டிய பிறகு பிள்ளைத்தமிழ் பாடுதல் இல்லை என்ற மரபையும் நவநீதப் பட்டியல் காட்டுகிறது. பிள்ளைப்பருவம் 16 வயது எனும் வரையறையை உளவியலாளர்களும் கூறுகின்றனர். குழந்தைப் பருவம் ஆணுக்கு 16 வயதளவும் பெண்ணுக்குப் பூப்பு நிகழும் வரையும் பாட்டியல்களில் காணப்படுகிறது. உளவியல் அடிப்படையில் குழந்தைகளைப் பொதுவாகப் பச்சிளம் பருவம், குழந்தைப் பருவம், முன்குழவிப் பருவம், வளரிளம் பருவம் என்ற வகைகளில் பிரிக்கிறார்கள். பிறந்தது முதல் 2 வருடம் வரையுள்ள காலத்தைப் பச்சிளம் பருவம் எனவும், 2 முதல் 5 வரை உள்ள காலத்தை முன்குழவிப் பருவம் எனவும், 6 முதல் 8 வயதுவரை பின்குழவிப் பருவம் அல்லது குழந்தைப்பருவம் எனவும், 8 முதல் 11 வரை பிள்ளைப்பருவம் எனவும், 12 முதல் 14, 15 வயது வரையும் வளரிளம் பருவம் அல்லது குமரப்பருவம் எனவும் வகைப்படுத்துகின்றனர் (Sankaran, 1944).

## புலவரின் தாயுள்ளம்

பிள்ளைத்தமிழ் இலக்கியங்களைப் பயிலும்போது நாம் பாட்டுடைத் தலைவரின் சிறப்புகளையும் பெருமைகளையும் இலக்கிய நயங்களையும் சுவைக்கிறோம். அவ்விலக்கியத்துள் படைப்பாளியின் தாய்மை உணர்வும் கலந்திருப்பதை அறிவதில்லை. குழந்தை மீதான தாய்மை உணர்வைக் காப்பு, தால், அம்புலி ஆகிய மூன்று பருவங்களில் மிகுதியாக உணர முடியும். பிற பருவங்களும் குழந்தையைப் பாடுபவை எனினும், இம்மூன்று பருவங்களிலும் அன்னையின் இயல்பூக்க நிலையைக் காணலாம். பிறந்த குழந்தை முதல் நாளிலிருந்து 12 வாரங்கள் வரையிலான பச்சிளம் பருவத்தில், குழந்தையின் சீரணம், உடல் உறுப்பு இயக்கம் முதலியன சீராகச் செயல்படும் வரையிலும் குழந்தையினைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது. இவ்வெண்ணம் பெற்ற தாய்க்கு இயற்கை உணர்வாக அமைந்திருக்கும். ‘குழந்தையைப் பெற்றெடுத்த ஒருத்தியாகத் தன்னை அறிந்த

அவன்(குழந்தையின்) தாய் தன்பங்கில் பெருமிதமும் கொள்ளுவாள். அதனைத் (குழந்தையை) தீங்குகளினின்றும் காக்க வேண்டும் என்ற உறுதி அவளிடம் இருக்கும் (அப்புள்ளாச்சாரி,2006). இவ்வுறுதியே இலக்கிய நெறியில் காப்புப் பருவமாக அமைந்துள்ளது. இதனை மகப்பற்று ஊக்கம் எனக் குறிப்பர் (Sankaran, 1944). முன்பின் குழந்தையைக் காக்கும் முறைகளை அறியாத தாயாகிய புலவர், தன் நம்பிக்கைக்குரிய தெய்வங்களை வேண்டும் நிலையைக் காப்புப் பருவச் செயல்களில் காணமுடிகிறது. இதன் அடிப்படையிலேயே தெய்வங்களைக் குழந்தையாகப் பாவிக்கும்போது அந்தந்தத் தலத்திற்கு உரிய தெய்வங்களை வேண்டுவதாகவும், அரசரைப் பாடும் போது இறைவர்களையும், துறவிகளைப் பாடும்போது அந்தந்தச் சமயஇறை, சமயச்சான்றோர், சமயச்சின்னங்கள் ஆகியோரை வேண்டுவதாகவும், அரசியல் தலைவர்களைப் பாடும்போது அந்தத் தலைவரது வழிகாட்டிகளை வேண்டுவதாகவும் பிள்ளைத்தமிழின் காப்புப்பருவம் பாடப்படுகிறது. தனது பிள்ளை காக்கப்பட வேண்டும் என்று தாய் நினைப்பதை உயிர் இயல்பூக்கம் என்று மேலே கண்டோம். இவ்வுணர்வு இயல்பூக்கமன்று என்ற கருத்தும் இங்கு குறிக்கத்தக்கது.

தாலப்பருவம் அடுத்த நிலையில் தாய்மையை உணர்த்தும் பருவமாகும். தாலாட்டு குழந்தை உறங்குவதற்காகப் பாடப்படுகிறது. எனினும் இப்பருவத்தைக் குழந்தையின் உளவியல் என்னாது தாய்மையின் உளவியலாகக் கூறக் காரணம் உண்டு. தாலாட்டுப் பாடும்போது குழந்தை உறக்கம் கொள்வது 'மறிவினை' ஆகும். அதாவது, தன்னைப் பாதுகாப்பவரின் செயலுக்குக் குழந்தை செய்யும் பிரதிச் செயல். உறங்கிவிட்ட குழந்தையின் உள்ள நிலையை அறிந்துகொள்ள முடியாது. மேலும் "தாலாட்டின் இசை உணர்வும் ஒளி நயமும் தான் குழந்தைக்கு உரியனவாகின்றனவேயன்றி பாடலின் பொருள் குழந்தைக்குப் புரிவதில்லை. சாதாரணப் பேச்சைப் புரிந்து கொள்ளும் ஆற்றலே குழந்தைக்கு ஒரு வயதுக்கு மேல்தான் வருகிறது. தாலாட்டு பாடல்களைப் புரிந்து கொள்வதற்கு 4 அல்லது 5 வயதாவது இருக்க வேண்டும். ஆதலால், தாலாட்டுப் பாடுவது தாயின் உளநிலையே ஆகும். தாலாட்டு மூலம் குழந்தை எய்தும் உணர்வாகத் தாயின் அரவணைப்பையும் அருகாமையையும் உணர்த்துவதாகவும் குறிப்பிடுவர் (Meenakshi Balganesh, 2021). இது ஏற்கக் கூடிய கருத்தாகும். ஏனெனில் தன் தாய் மற்றும் தன்னைப் பேணுவோரின் குரலைக் குழந்தை முதலில் நினைவு கொள்கிறது. எனவே தாலாட்டின் மறிவினையாகக் (reaction) குழந்தை உறங்குகின்றது. தாலப்பருவத்தின் பாடுபொருளுக்கும் குழந்தையின் புரிதலுக்கும் தாலாட்டுப் பருவம் அமையும் காலங்களுக்கும் இயைபு இல்லை. 'எனவே தாய் தன்னுடைய உணர்வையே தாலாட்டில் பாடுகிறாள். குழந்தைக்குப் பரிசளித்த உறவினர்களை நன்றியுணர்ச்சியுடன் தாலாட்டில் ஏற்றம் கொடுத்துப் பாடும்போது தாய் அவர்கள் நல்லெண்ணத்தையும் பெறுகிறாள்'. தாலாட்டு குழந்தைகளுக்குப் புரியாது எனினும், தாலாட்டில் இடம்பெறும் லாலிலாலி, ராரீராரி எனும் ஓசையின் ர, ல எழுத்துக்கள் இரண்டும் குழந்தையின் நாவசைப்பைத் தூண்டும் வகையில் அமைகின்றன. மேலும், பிள்ளைத்தமிழ் இலக்கிய மரபில் பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள் பெரிதும் பேசப்படுகின்றன. இம்மரபு பாட்டுடைத் தலைவரின் இறந்தகாலப் பருவத்தில் நிகழ்காலப் பெருமைகளைப் பாடுவதால் சாத்தியமாகிறது. உலகியலில் தன் குழந்தையின் வருங்காலம் பற்றி நிச்சயமாக அறியாது, தாயாக இருக்கும் பெண் மனக்கனவுகளை மட்டுமே கொண்டிருக்கிறாள். ஆதலால், தனது பிள்ளைப்பேற்றையும், உறவு முறைகளின் சிறப்புகள், புராணக் கதைகள் ஆகியனவே நாட்டுப்புறத் தாலாட்டுகளில் இடம்பெறுகின்றன.

அம்புலிப் பருவப் பாடுமுறையிலும் தாயின் உள்ளநிலையை அறியமுடிகிறது. இப்பருவம் தன் குழந்தையை முன்னிறுத்தி நிலவுடன் பேசுவதாக அமைகிறது. குழந்தையைப் புரிந்து கொள்ள இருவகை உறவுகளை அறிஞர் குறிப்பர் (Appullachari, 2006). அவையாவன புறவய நோக்கு, அகவய நோக்கு என்பனவாகும். புறவய நோக்கு என்பது குழந்தையின் உயரம், எடை, பருமன், திறமைகள் போன்றவற்றைக் குறிப்பதாகும். அகவய நோக்கு என்பது குழந்தையின் நோக்கில் உலகம் எத்தகையது எனக் காண்பதாகும். அம்புலிப் பருவம், குழந்தையைத் தாய் அறிய முற்படும் அகவய நோக்காக அமைகிறது. தன் குழந்தையுடன் முதன் முதலாக விளையாடும் ஒரு உறவாக நிலவைக் காட்டுகிறாள். இதில் தன் குழந்தையை மகிழ்விக்க விளையாட்டுத் துணை ஒன்றைத் தேடித்தரும் தாயின் உளவியல் வெளிப்படுகிறது. அதில் சாம, பேத, தான, தண்ட எனும் நான்கு வகைகளாகத் தாய் பாடுகிறாள். தனது குழந்தை, மற்றவரையும் தன்னைப்போல் சமமாக எண்ணுபவனாகவும், தன்னைப் பிறரிடத்திலிருந்து

வேறுபடுத்திக் காட்டிக் கொள்வான் என்றும், தனக்கெனத் தனித்த இடத்தைத் தக்கவைத்துக் கொள்வான் என்றும், தன்னோடு பொருந்தாத உறவுகளைத் தண்டிப்பான் என்றும் மனதுள் எண்ணிப் பாடுகிறாள். சாமம் என்னும் பாடுபொருள் குழந்தைகளின் ஒப்பார் குழுவைக் குறிக்கிறது. அதாவது ஒத்த வயதும் ஒத்த நிலையிலும் உள்ள பிள்ளைகள் ஒன்றுபடுவதால் ஒப்பார் குழு உருவாகிறது. இது கற்றல் கற்பித்தல் முறைக்கு உரிய உளவியல் என்பர். என்ற கருத்து உருவாகிறது. பேதம், தானம் என்பவை ஒப்பார் இந்த வகையில் நோக்கும்போது, 'சாமம்' என்பதில் உலகியலைக் கற்கும் குழந்தைக்கு ஒப்பார் குழுவாக (Peer group) நிலவைத் தாய் அறிமுகம் செய்து வைக்கிறாள் குழுவின் உறவுநிலைகளையும், தண்டம் என்பது அவ்வுறவுக்குள் வரும் முரண்பாடுகளையும் குறிப்பதாக அமைகிறது இந்நான்கு நோக்கிலும் தனது குழந்தை எவ்வாறு நடந்து கொள்வான் என்ற மனக்கற்பனையாக அம்புலிப்பருவம் பாடப்படுவதையும், குழந்தையை அகவயப் போக்கினை அறியும் அடிப்படையில் அமைவதையும் அறியமுடிகிறது. குழந்தையின் இத்தகைய அகவய அம்சமே அவனுடைய தன்மை என்று கூறுவதன் ஒரு பகுதியாகும் (Appullachari, 2006). எனவே அம்புலிப் பருவம் தாய் தனது குழந்தையின் மனநிலையை அகவய நோக்கில் புரிந்து கொள்ளப் பாடுவதை அறியமுடிகிறது. பொது பொதுமனவெழுச்சிகளான பயம், கவலை, கோபம், பொறாமை, மகிழ்ச்சி, அன்பு, அறிவார்வம் முதலியன குழந்தை பிறந்து சில மாதங்களில் தோன்றுகின்றன. அம்புலிப் பருவம் பிள்ளையின் 15 ஆம் திங்களில் பாடப்படுவதாகும் (Rasamanickam, 1973). குழந்தைக்கு உருவாகும் பயத்தைப் போக்க சாமம் எனும் பாடுபொருளும், கவலையைப் போக்க பேதம், தானம் எனும் பாடுபொருளையும், கோபத்தைப் போக்கத் தண்டம் எனும் பாடுபொருளையும் தாயாகிய புலவர் கையாளுகிறார். சாம, பேத, தான, தண்டம் ஆகியவற்றுள் முதல் மூன்றும் குழந்தையின் தூண்டலாகவும், தண்டம் என்பது குழந்தையின் துலங்கலாகவும் அமைகிறது. செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, சிற்றில், சிறுபறை, சிறுதேர் முதலான பருவங்கள் தாய் வேண்டுவதாக அமையும் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களாகும். இவற்றைச் செய் எனத் தாயின் இயல்பூக்கத் தூண்டல்களாகவும், மேற்சொன்ன பருவங்களைக் கொள்ளலாம். குப்புற விழுதல், கை தட்டுதல், முத்தம் கொடுத்தல், நடத்தல், விளையாடுதல், பொருட்களைத் தட்டி ஓசை எழுப்புதல் ஆகிய செயல்கள் வளரும் குழந்தைகளின் இயக்கச் செயல்களாகும். இவ்வியக்கச் செயல்களை இயக்க நடத்தை எனவும், இது மனநிறைவான கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையானது எனவும் அறிஞர் கூறுவர்.

## சிற்றில் பருவம்

சிற்றில் பருவம் குழந்தையின் 17ஆம் திங்களில் பாடப்படுவதாகும். தெருவில் சிறுமியர் கட்டும் மணல் வீட்டினைச் சிதைப்பதாக வரும் பாட்டுடைத் தலைவனைக் கெஞ்சுவதாக இப்பருவம் பாடப்படும். சிற்றில் பருவமானது புலவரின், தாய், மழலை என்ற இரு நிலையில் இருந்தும் வேறாகிச் சிறுமியரின் உளநிலையில் நின்று பாடுவதாக அமைகிறது.'இப்பருவத்தை மட்டும் சிறுமியர் பாடுவதாக பாவித்து அழைப்பது இயல்பாகும்' என்ற கருத்தும் இம்முடிபுக்குத் துணைசெய்கிறது. ஆனால் பாட்டுடைத் தலைவன் எதனால் வீட்டினைச் சிதைக்க வருகிறான் என்ற காரணம் வெளிப்படையாக இல்லை. கோபத்தால் இடிக்க வருகிறான் அல்லது பொறாமையால் இடிக்க வருகிறான் என்ற இரு நிலைகளிலும் இப்பருவ நிகழ்வுகளைக் கருத முடிகிறது. இருபாலரும் சேர்ந்து விளையாடும் பிள்ளைப் பருவத்தில் ஆண் பிள்ளை கொள்ளும் கோப மனவெழுச்சி காரணமாகச் சிற்றிலைச் சிதைப்பதாகக் கொள்ளலாம். பொதுவாக ஆண் சிறார்கள் பெண்களிலும் கூடுதலான வன்செயல்களுடன், நடத்தைகளுடன் கோப வெளிப்பாட்டைக் காட்டுகின்றனர் (Jeyarasa, 2005). கோபம் விளைவித்த பொருளை நேரடியாகத் தாக்குதல் குழந்தையின் மெய்ப்பாடுகளுள் ஒன்றாகக் கூறுவர். கோபம் மட்டுமே அல்லாமல் குழந்தைப் பருவத்தில் ஏற்படும் பொறாமை உணர்வும் இச்செயலுக்குக் காரணமாக இருக்கலாம். ஏனெனில் கோபத்துடன் பெருமளவில் இணைந்ததான ஒரு மனவெழுச்சியாகப் பொறாமை அமைகிறது. இப்பருவத்தை வீரநிலைக்கால உணர்வின் (Heroic factor) எழுச்சி அல்லது எச்சம் எனக் கூறமுடியும். பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட குழந்தையை, எயில் வளைத்த அரசன் கோட்டையைச் சிதைப்பதாகக் கற்பனை செய்த புலவர் மனநிலையாகவும் எண்ண முடிகிறது (Thirunavukaru, 2022). பெண்பாற் குழந்தைகள் சிற்றில் சிதைப்பதைத் தடுப்பதாகப் பாடல்கள்

அமைந்துள்ளன. குழந்தைப் பருவத்துச் சிறுவனான தம் முறைமாமன் உறவு கொண்டோருடன் நடக்கும் செல்லக் குறும்புகளாகவும் இப்பருவத்தைக் கருதலாம். இக்கருத்துக்கு மீனாட்சியமை பிள்ளைத்தமிழில் இறைவி சிவபெருமானைச் சிற்றில் சிதைக்க வேண்டாம் எனக் வேண்டுவதாக அமைந்த பாடலும் காரணமாகும். சிறுமியர் வேண்டிக் கொண்டு தன் வீட்டை காத்துக் கொள்ளும் பொருட்டுக் கெஞ்சும் உள்ளநிலை இப்பருவத்தில் வெளிப்படுகிறது. சங்க இலக்கியங்களில் தலைவியும் தோழியும் கூடிக் கட்டிய சிற்றிலைத் தலைமகன் வந்து சிதைப்பதாகவும் கலித்தொகைப் பாடல் ஒன்றுள்ளது. சிற்றில் பருவத்தைப் பாடும் முன்னோடி இலக்கியங்கள் அவ்விரு குழந்தைகளுக்கான உறவினைத் தலைமகன், தலைவி அல்லது மணமுறை உறவுச்சிறார்கள் எனக்கருத இடம்தருகிறது. இச்சிற்றில் பருவத்தை மனித இயல்பூக்கங்களில் ஒன்றாக அமையும் ஆக்கும் இயல்பூக்கம் என்பர். இவ்வியல்பூக்கம் தற்காப்புக்காகவும் வம்சத்தைக் காப்பதற்காகவும் ஏற்படும் போக்கு. இது பிள்ளைகளிடத்தில் சிற்றில் கட்டுதல், விளையாட்டுக் கருவிகளில் பாகங்களைப் பிரித்துத் திரும்பவும் சேர்த்தல் முதலிய செய்கைகளில் தென்படும் (Sankaran, 1944). பெண்பாற்குரியதாக அமைந்த சிற்றில் பருவங்கள், தான் உருவாக்கியவற்றைக் காத்தல், வம்ச விருத்தி முதலிய குணங்களைப் பெண்பிள்ளைகள் இயல்பாகக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

## முடிவுரை

சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பிள்ளைப்பாட்டு எனும் இலக்கிய வகை குழந்தை உளவியலை அடிப்படையாகக் கொண்டு பாடப்படுகிறது என்ற கருதுகோள் இக்கட்டுரைக்கு அடிப்படையாக அமைந்தது. குழந்தையின் எண்ண இயல்புகள் தோன்றி வளரத் தொடங்கும் பருவம் முதல் தாயின் உள்ளமே பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் வெளிப்படுகிறது. ஆதலால் பிள்ளைப்பாட்டில் தாய்மையின் உளவியலும் உண்டு என்ற மாற்றுக் கருதுகோளோடு கட்டுரை விரிந்தது. அதன்படி இக்கட்டுரையில், பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் குழந்தை, தாய், சிறுமியர் எனும் மூவகை உள்ள நிலைகள் பாடப்படுகிறது எனவும், இம்மூன்று நிலையையும் புலவர் மனப்படைப்பினால் இயற்றுகிறார் என்பதும் கூறப்பட்டது. தாயின் உள்ளநிலையாக நற்றாய், செவிலி, கவிக்கூற்று எனும் வகையையும், காப்புப் பருவத்தில் புலவரது நற்றாய் உணர்வும், பிற பருவங்களில் தாய், தந்தையர் பெயர்களைச் சுட்டுவதில் செவிலித் தாயெனும் நிலையும், நிகழ்காலத் தலைவர்களைப் போற்றி எழுதும் தற்காலப் பிள்ளைத்தமிழில் கவிக்கூற்று எனும் நிலையையும் காணமுடிகிறது. காப்பு, தால், அம்புலி ஆகிய மூன்று பருவங்களும் தாயின் உள்ள நிலையிலும், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்கள் குழந்தையின் இயக்க நடத்தைகளாகவும், தாயின் தூண்டல் நிகழ்வாகவும் அமைகின்றன. சிற்றில்பருவம் ஆண் குழந்தையுடன் விளையாட வரும் சிறுமியர் உள்ள நிலையைப் பேசுவதாக அமைகிறது. இந்திரகாளியம் கூறும் பிள்ளைப் பருவம் உளவியலாளர் சுட்டும் பிள்ளை பருவத்தோடு ஆண்டளவில் ஒத்துப் போகிறது. எனினும், முன்குழவி, குழவி, தளர்நடைப்பருவம், வளரிளம் பருவம் எனும் உளவியலாளர்களின் பகுப்பு முறை இலக்கணங்களில் இல்லை. பாட்டியல் இலக்கணங்கள் குறிப்பிட்ட மாதங்களை மட்டும் பருவங்களாகக் கூறுகிறது. பெண்பால், ஆண்பால் இருவருக்கும் பின்பற்றப்படும் பிள்ளைப்பருவ வயது வரம்பு வேறாக அமைகிறது. இக்கட்டுரை பிள்ளைக்கவி எனும் இலக்கிய வகையில் பாடுமுறை, வரையறை முதலியவற்றை மட்டுமே உளவியல் நோக்கில் பொருத்தி, படைப்பாளி மனநிலையை விளக்கியுள்ளது. தமிழில் தோன்றிய பிள்ளைத்தமிழ் நூல்கள் அனைத்திலும் தரவுகளைத் திரட்டித் தாய், மகவு, பிற உறவுகள் என்னும் நிலையில் ஆராயின் விரிவான முடிவுகளை எட்ட முடியும் என்பது நம்பிக்கையாகும்.

## References

Appullachari, (2006) Kulanthai Ulaviyal, Sandha Pathippagam, Chennai, India.

Jagathrakshakan, (1997) Naalayira Divya Prabandham, Alwar Aaivu Mayam, Chennai, India.

Jeyarasa, Saba. (2005) Kulanthai Ulaviyalum Kalviyum, Poobalasingham Book Depot, Colombo, Srilanka.

Meenakshi Balganesh, (2021) Facets of life and society as depicted in Pillaitamizh literature, International Research Journal of Tamil, 3(S-1), 9-18. https://doi.org/10.34256/irjt21s12

Rasamanickam, M. (1973) Ulaviyal thuraikal, TNTBESC, Chennai, India.

Renevellock, Austin Warren, (1966) Ilakkiya Kolkai, Paari Nilaiyam, Chennai, India.

Sankaran, K. (1944) Kulanthai Iyarkaiyum Kalviyum, Royal seema Krishanaraya Pathippagam, Chennai, India.

Subramaniyan, S.V. (1984) Tamil Ilakkiya Vagaiyum Vadivum, Tamil Pathippagam, Chennai, India.

Tamilarasi, K. (2007) Irupatham Nutrandin Pilaitamil Ilakkiyankal, Subramaniya Bharathair Tamiliyar pulam, Puduvai University, Puducherry, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License